# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி




## முதல்நிலை அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சோஷல் இன்டிகேட்டர்
பெப்ரவரி 2024

இந்த ஆய்வானது சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் (USAID) ஊடாக அமெரிக்க மக்களின் ஆதரவுடன் சாத்தியப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் உள்ளடக்கங்கள் ஆய்வை மேற்கொண்டவர்களின் முழுப் பொறுப்பாகும். மேலும் அவை USAID அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

# பொருளடக்கம்


அறிமுகம் 5

முறைமையியல் 6

முடிவுகளின் சாராம்சம் 7

ஆய்வு முடிவுகள் 13

கணக்கெடுப்பு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் சமூகத்தின் பல்வேறு பிரிவினரால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள் மீதான பொதுமக்களின் அபிப்பிராயம் 13

வரைபு 01: முக்கிய கோரிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் 13

வரைபு 02: முக்கிய கோரிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - வயது 13

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றிய அபிப்பிராயம் 14

வரைபு 03: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு 14

வரைபு 04: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு - வயது 14

வரைபு 05: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனுமதித்தல் 15

வரைபு 06: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனுமதிக்காமைக்கான காரணம் 15

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பான பொதுமக்களின் அபிப்பிராயம் 16

வரைபு 07: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு 16

வரைபு 08: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு - வயது 16

வரைபு 09: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை அனுமதித்தல் 17

வரைபு 10: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை அனுமதிக்காமைக்கான காரணம் 17

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் 18

வரைபு 11: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் 18

வரைபு 12: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - இனம் 18

வரைபு 13: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - மதம் 19

வரைபு 14: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - வயது 19

வரைபு 15: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகள் தொடர்பிலான அபிப்பிராயம் 20

வரைபு 16: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளில் சர்வதேச பங்களிப்பு மீதான அபிப்பிராயம் - இனம் 20

வரைபு 17: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளில் சர்வதேச பங்களிப்பு பற்றிய அபிப்பிராயம் - மதம் 21

மலையகத் தமிழ் 22

வரைபு 18: மலையகத் தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகள் தொடர்பிலான விழிப்புணர்வு 22

வரைபு 19: மலையகத் தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகள் தொடர்பிலான விழிப்புணர்வு - இனம் 22

வரைபு 20: மலையகத் தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகள் தொடர்பிலான விழிப்புணர்வு - வயது 23
வரைபு 21: லயன்களில் வசிக்கும் மலையகத் தமிழ் சமூகத்திற்கு சட்ட உரிமையுள்ளள காணி வழங்கப்படுவதற்கான ஆதரவு 23
வரைபு 22: லயன்களில் வசிக்கும் மலையகத் தமிழ் சமூகத்திற்கு சட்ட உரிமையுள்ளள காணி வழங்கப்படுவதற்கான ஆதரவு - இனம் 24

தேர்தல் பிரச்சார நிதிச் சட்டம் 25
வரைபு 23: தேர்தல் பிரச்சாரங்களுக்கு செலவிடுதல் பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் 25
வரைபு 24: தேர்தல் பிரச்சாரங்களுக்கு செலவிடுதல் பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் - வயது 25
வரைபு 25: தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) குறித்த விழிப்புணர்வு 26
வரைபு 26: தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) குறித்த விழிப்புணர்வு - வயது 26
வரைபு 27: தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) பற்றிய கருத்து 26

உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகளின் செயற்படாநிலை 27
வரைபு 28: உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் 27
வரைபு 29: உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் - பிரதேசம் 27
வரைபு 30: மாகாண சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் 28
வரைபு 31: மாகாண சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் - பிரதேசம் 28

சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம் 29
வரைபு 32: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய விழிப்புணர்வு 29
வரைபு 33: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய விழிப்புணர்வு - வயது மற்றும் பிரதேசம் 29
வரைபு 34: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம் 30
வரைபு 35: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம் - வயது மற்றும் பிரதேசம் 30

மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் 31
வரைபு 36: மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் 31
வரைபு 37: மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் - இனம் 31
வரைபு 38: மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் - வயது மற்றும் பிரதேசம் 32
வரைபு 39: மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளல் 32
வரைபு 40: மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளல் - இனம் 33
வரைபு 41: மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளல் - வயது 33

ஊழல் இடம் பெறுகின்ற அளவு பற்றிய கருத்து 34
வரைபு 42: ஊழல் இடம் பெறுகின்ற அளவு பற்றிய கருத்து 34
வரைபு 43: ஊழல் இடம் பெறுகின்ற அளவு பற்றிய கருத்து - வயது மற்றும் பிரதேசம் 34

# அறிமுகம்

இவ் அறிக்கையானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப்பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி (அலை 5) முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. தற்போதைய அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் வகையில் பொருளாதார, கொள்கை சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. பொருளாதார நெருக்கடிக்கு சராசரி குடிமக்கள் காரணம் இல்லை என்ற போதிலும், பொருளாதார நெருக்கடியை தீர்க்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயன்முறையின் சுமைகளை சராசரி குடிமக்கள் சுமக்க வேண்டி உள்ளது. இந்தப் பின்னணியில், தற்போது நாட்டில் நிலவுகின்ற ஆட்சி பற்றி மக்களிடம் காணப்படும் நம்பிக்கை தொடர்பாக அறிந்துகொள்ளும் வகையில் இந்தக் கருத்துக் கணிப்பு வடிவமைக்கப்பட்டது.

இக் கருத்துக் கணிப்பானது மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் அரசியல் கள விவாதங்களில் முன்வைக்கப்பட்ட சில முக்கிய விடயங்களான உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், ஈஸ்டர் ஞாயிறு (உயிர்த்த ஞாயிறு) தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள், மலையக தமிழ் சமூகத்தின் மீதான விழிப்புணர்வு மற்றும் அபிப்பிராயம், தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் செயற்படாநிலை, சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய மக்கள் அபிப்பிராயம், மாகாண சபை முறைமை தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயம், ஊழல் இடம் பெறுகின்ற அளவு தொடர்பான அபிப்பிராயம், போன்றவற்றின் மீது கவனம் செலுத்தியது.

# முறைமையியல்

இந்த கணக்கெடுப்பு ஆய்வானது நான்கு முக்கிய இன சமூகங்களிலிருந்து (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) எழுமாறாக தேர்ந்தெடுக்கப்பட்ட 1350 நபர்களுக்கிடையில் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டது. நேர்காணல்கள் நேரடி நேர்காணல் நுட்பத்தைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டன. மற்றும் தரவு சேகரிப்புக்காக மொத்தம் 80 வெளிக்கள கணக்கெடுப்பாளர்கள் (ஆண் மற்றும் பெண்) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மக்களின் இன மற்றும் பிராந்திய பன்முகத்தன்மையைப் பெறுவதற்காக பல் நிலை அடுக்கு எழுமாற்று நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆகவே 25 மாவட்டங்களிலும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் அபிப்பிராயங்களை இந்த கணக்கெடுப்பு ஆய்வானது பதிவு செய்துள்ளது. கணக்கெடுப்பு ஆய்வுக்கான களப்பணி 2023 நவம்பர் 6ம் திகதி முதல் 23ம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டது. மக்களின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத் தொகுப்பு நிறையேற்றப்பட்டது. சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# முடிவுகளின் சாராம்சம்

## கணக்கெடுப்பு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் சமூகத்தின் பல்வேறு பிரிவினரால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள் மீதான பொதுமக்களின் அபிப்பிராயம்

- பெரும்பான்மையான (94% க்கும் அதிகமான) இலங்கையர்கள் முன்வைக்கப்பட்ட அனைத்து முன்மொழிவுகளையும் ஏற்றுக்கொள்கின்றனர். அதாவது, அனைத்து 'அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் கணக்கில் வராத அவர்களது சொத்துக்கள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்படல் வேண்டும்' என்ற முன்மொழிவை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். 'தேர்தல்கள் உரிய நேரத்தில் நடாத்தப்படல் வேண்டும்', 'பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களை பொறுப்புக்கூற வைத்தல் வேண்டும்' என்ற முன்மொழிவையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மேலும், 'ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்தல் வேண்டும்' என்ற முன்மொழிவையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.
- அரசியல்வாதிகளை பொறுப்புக்கூற வைத்தல் வேண்டும் என பெரியோருடன் (94.2%) ஒப்பிடுகையில் சற்றே அதிக சதவீதமான இளையோர் (97.3%) நம்புகின்றனர். எவ்வாறாயினும், பெரும்பாலும் இதேபோன்ற சதவீதமான இளையோர் மற்றும் பெரியோர் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடாத்தப்படல் வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்.

## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து பொதுமக்கள் அபிப்பிராயம்

- 2023 செப்டம்பர் 15ம் திகதி அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றி பாதிக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் (61.5%) அறிந்திருக்கவில்லை.
- இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் அறிந்திருக்கவில்லை என்று கூறுவதுடன் இந்நிலைமையானது இரு வயதுப் பிரிவினரிடமும் காணப்படுகின்றது.
- உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (38.5%) பற்றி அறிந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் (72.6%) அதனை அனுமதிக்கவில்லை.
- அனுமதிக்காமைக்கான காரணங்களை கூறுமாறு கேட்டபோது, பதிலளித்தவர்கள் பல்வேறு காரணங்களை கூறினர். முன்வைக்கப்பட்ட அனைத்து காரணங்களிலும், மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்ட காரணங்களில் ஒன்று, அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களின் நலனுக்காக இதைத் தவறாக பயன்படுத்துவார்கள் (85.1%) என்பதாகும். இது பொதுமக்களின் மனித உரிமைகள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் (72.5%) என்பது அடுத்த வலியுறுத்தப்பட்ட காரணமாகும். 'தற்போதுள்ள சட்டம் போதுமானது இச்சமயம் புதிய சட்டங்கள் எதுவும் தேவையில்லை' என்பது மூன்றாவது மிக உயர்ந்த காரணமாக (31.2%) வலியுறுத்தப்படுகின்றது.

## உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் குறித்து பொதுமக்கள் அபிப்பிராயம்

- 2023 செப்டம்பர் 18ம் திகதி அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பற்றி பெரும்பான்மையானவர்கள் (71.6%) அறிந்திருக்கவில்லை.

- உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் குறித்து அறிந்திருக்காத நிலை இரு வயதுப் பிரிவுகளிலும் பிரதிபலிக்கிறது. இருப்பினும், இளையோருடன் (18-29 வயதுக்கு இடைப்பட்டவர்கள்) ஒப்பிடும்போது, பெரியோரிடையே (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) இவ் அறிந்திருக்காத நிலை சற்று அதிகமாக உள்ளது.

- உத்தேச நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பற்றி அறிந்த 28.4% ஆனோரில், பெரும்பான்மையானவர்கள் (71.1%) அதனை அனுமதிக்கவில்லை.

- அனுமதிக்காமைக்கான காரணங்களை கூறுமாறு கேட்டபோது, பதிலளித்தவர்கள் பல்வேறு காரணங்களை கூறினர். முன்வைக்கப்பட்ட அனைத்து காரணங்களிலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களின் நலனுக்காக இதைத் தவறாக பயன்படுத்துவார்கள் (82.5%) என்பதே மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்ட காரணமாகும். இது பொதுமக்களின் மனித உரிமைகள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் (77.5%) என்பது அடுத்த முக்கிய காரணமாகும். அனுமதிக்காமைக்கான மூன்றாவது (43.2%) மிக உயர்ந்த காரணமாக கூறப்படுவது 'மாற்று அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தல் வரையறுக்கப்படலாம்/ மட்டுப்படுத்தப்படலாம்' என்ற விடயமாகும்.

## ஈஸ்டர் ஞாயிறு (உயிர்த்த ஞாயிறு) தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் பற்றிய அபிப்பிராயம்

- ஈஸ்டர் ஞாயிறு (உயிர்த்த ஞாயிறு) தாக்குதலுக்கு யார் காரணமானவர்கள் என்று விசாரித்து அவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுக்க, இலங்கை அரசாங்கம் இதுவரை முன்னெடுத்த நடவடிக்கைகள் (பொறுப்புக் கூற வைத்தல்) தொடர்பில் பெரும்பான்மையான இலங்கையர்கள் (89.6%) திருப்தி அடையவில்லை.

- இந்த அதிருப்தி அனைத்து பிரதான இன சமூகங்களிலும் காணக்கூடியதாக உள்ளதுடன் பெரும்பான்மையானோர் திருப்தி அடையாமையை வெளிப்படுத்துகின்றனர்.

- முஸ்லிம் மற்றும் இந்து மதக்குழுக்களுடன் ஒப்பிடுகையில் பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதத்தவரிடையே திருப்தியின்மை அதிகமாக காணப்படுகின்றது.

- திருப்தி அடையாமை இரு வயதுப் பிரிவுகளிலும் காணப்படினும் இது இளையோர் மத்தியில் (18-29 வயது) பிரிவினரிடையே சற்று அதிக சதவீதமாக உள்ளது.

- ஈஸ்டர் ஞாயிறு (உயிர்த்த ஞாயிறு) தாக்குதல் தொடர்பான விசாரணை குறித்து பல்வேறு தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்ட பல்வேறு கருத்துக்கள் குறித்து பதிலளித்தவர்களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அவர்களில், 34.4% இலங்கையர்கள் இந்த விடயம் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என எண்ணுகின்றனர், 32.8% ஆனோர் சர்வதேச கண்காணிப்பாளர்களுடன் கூடிய உள்நாட்டு விசாரணை நடத்தப்படல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். மேலும் 21.8% ஆனோர் உள்நாட்டு விசாரணையே போதுமானது என எண்ணுகின்றனர்.

- சம்பவம் குறித்து சர்வதேச விசாரணை அல்லது சர்வதேச கண்காணிப்பாளர்களுடன் கூடிய உள்நாட்டு விசாரணை நடத்தப்படல் வேண்டும் என்று எண்ணுபவர்கள் சிறுபான்மை சமூகத்தினரிடையே (தமிழ், மலையக தமிழ் மற்றும் முஸ்லிம்) ஓரளவு அதிகமாக உள்ளனர்.

- இச்சம்பவம் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்று எண்ணுபவர்கள் கிறிஸ்தவ சமூகத்தில் (RC & Non-RC) ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளனர், அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் சர்வதேச விசாரணைக்கு தம் ஆதரவைத் தெரிவிக்கின்றனர். மேலும், முஸ்லீம் சமூகத்தில் (46.9%) கிட்டத்தட்ட பாதியளவானோர் சர்வதேச விசாரணை வேண்டும் என்று எண்ணுகின்றனர். மாறாக, பௌத்தர்களும் இந்துக்களும் இருவேறு அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்கின்றனர். அதாவது சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களுடன் கூடிய உள்நாட்டு விசாரணை ஆகிய இரு கருத்துக்களுக்கும் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

## மலையக தமிழ் சமூகம்

- தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யவதற்காக அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழ் சமூகத்தின் முதலாவது குழு இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றன என்கின்ற விடயம் தொடர்பில் அரைவாசிக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் (53.7%) அறிந்து வைத்துள்ளனர்.
- இந்த விடயம் தொடர்பில் சிறுபான்மை சமூகங்களிடையே குறிப்பிடத்தக்க அளவு அதிக விழிப்புணர்வு உள்ளது. 75% இற்கும் அதிகமான தமிழ் மற்றும் மலையகத் தமிழ் சமூகம் அறிந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது. அதேபோல், 60% இற்கும் அதிகமான முஸ்லிம் சமூகமும் இந்த விடயம் தொடர்பிலான அறிந்திருத்தலை உறுதிப்படுத்துகிறது. தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யவதற்காக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழ் சமூகத்தின் முதலாவது குழு வந்து 200 வருடங்கள் ஆகின்றமை குறித்து தாம் அறிந்திருக்கவில்லை என சிங்கள சமூகத்தில் அரைவாசி (52%) பேர் கூறுவது குறிப்பிடத்தக்கது.
- இந்த அறிதல் இளையோரை (18-29 வயது) விட பெரியோரிடையே (30 வயதுக்கு மேல்) குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக உள்ளது.
- பல தலைமுறைகளாக தோட்டங்களில் வாழ்ந்து வருகின்ற மலையகத் தமிழர்களுக்கு லய வீடுகளுக்குப் பதிலாக அவர்களுக்கென்று சட்ட உரிமையுள்ள காணியும் ஒழுங்கான வீடும் வழங்கப்பட வேண்டும் என்பதை எந்தளவிற்கு ஆதரிக்கின்றீர்கள் என்று கேட்டபோது, இலங்கையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (65.5%) இந்தக் கோரிக்கையை தாங்கள் பெருமளவு ஆதரிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் 25.4% இலங்கையர்கள் கோரிக்கையை ஓரளவு ஆதரிப்பதாக கூறுகின்றனர்.
- லயங்களில் வாழும் மலையகத் தமிழ் சமூகத்திற்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கான ஆதரவு அனைத்து இனக்குழுக்கள் மத்தியிலும் கணிசமான அளவு அதிகம் உள்ளது. எவ்வாறாயினும், இந்த கோரிக்கையை ஆதரிக்கும் சிறுபான்மை சமூகங்களின் சதவீதம் சிங்கள சமூகத்துடன் ஒப்பிடும் போது அதிகம்.

## தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம்

- பதிலளித்தவர்களிடம் தேர்தல் பிரச்சாரங்களுக்கான செலவுகள் குறித்து அவர்களின் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அதற்கு, பெரும்பான்மையான இலங்கையர்கள் (91.6%) ஒரு வேட்பாளர் தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக செலவிடும் பணத்தின் அளவு தொடர்பில் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.
- இரு வயதுப் பிரிவுகளிலும் உள்ள பெரும்பான்மையான இலங்கையர்கள், ஒரு வேட்பாளர் தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக செலவிடும் பணத்தின் அளவு தொடர்பில் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் என கருதுகின்றனர்.

- ஒவ்வொரு தேர்தலிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் செய்யும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, 2023 ஜனவரி 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) தொடர்பாக கணிசமான இலங்கையர்கள் (78.5%) அறிந்திருக்கவில்லை.
- பெரியோருடன் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) ஒப்பிடும்போது, இளையோரிடையே (18-29 வயது) அறிந்திருக்காமை ஓரளவு அதிகமாகவே இருந்தாலும், இந்த அறிந்திருக்காமை இரு வயதினரிடமும் காணப்படுகிறது.
- இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் (61.1%) இப் புதிய தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் பாரிய அளவிலான பிரச்சார செலவுகளைக் கட்டுப்படுத்தும் என்று நினைக்கின்றனர். ஏனைய 36.2% மானோர் அது தேர்தல் செலவினங்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று நினைக்கின்றனர்.

## உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் செயற்படாநிலை

- உள்ளூராட்சி மன்றங்களின் செயற்படாநிலை அவர்களை அல்லது அவர்களது குடும்பத்தை எந்தளவு பாதிக்கின்றது என்று கேட்டபோது, இலங்கையர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (51.6%) தமக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தனர்.
- உள்ளூராட்சி மன்றங்களின் செயற்படாநிலை தங்களை அல்லது தங்களது குடும்பத்தை அதிகளவு பாதிக்கின்றது என நகர்ப்புற மக்கள் நினைக்கின்றனர். மாறாக கிராமப்புற மக்களில் பாதி பேர் (53.5%) தமக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று நினைக்கின்றனர்.
- மாகாண சபைகளின் செயற்படாநிலை அவர்களை அல்லது அவர்களது குடும்பத்தை எந்தளவு பாதிக்கின்றது என்று கேட்டபோது, இலங்கையர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (53.7%) தமக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தனர்.
- மாகாண சபைகளின் செயற்படாநிலை தங்களை அல்லது தங்களது குடும்பத்தை அதிகளவு பாதிக்கின்றது என நகர்ப்புற மக்கள் நினைக்கின்றனர். மாறாக கிராமப்புற மக்களில் பாதி பேர் (55.7%) தமக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று நினைக்கின்றனர்.

## சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம்

- பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நிதி உதவி வழங்குவது தொடர்பில் IMF இனால் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆளுகை தொடர்பில் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட கற்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கு சில கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்களை IMF பரிந்துரைத்துள்ளது என்பதை அறிந்துள்ளதாக இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் (60.2%) கூறுகின்றனர்.
- பெரியோருடன் (30 வயதுக்கு மேல்) ஒப்பிடும்போது, இளையோரிடையே (18-19 வயது) இந்த அறிதல் அதிகமாக உள்ளது. அதேபோல், நகர்ப்புற மக்கள் (50.6%) மற்றும் கிராமப்புற மக்களிடையே (62.3%) இந்த அறிதல் அதிகமாக உள்ளது.

- இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, பொதுவாக IMF பரிந்துரைத்துள்ள இந்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மிகவும் அவசியமானது என கிட்டத்தட்ட 70% இலங்கையர்கள் நினைக்கின்றனர்.

- இந்தக் கண்ணோட்டம் இரு வயதுப் பிரிவுகள் மற்றும் நகர்ப்புற கிராமப்புற வட்டாரங்கள் இரண்டிலும் பிரதிபலிக்கிறது.

## மாகாண சபை முறைமை தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயம்

- மாகாண சபை முறைமை தொடர்பில் அவர்களின் கருத்தைக் கேட்டபோது, இலங்கையில் 30.7% ஆனோர் தற்போதைய மாகாண சபை முறையானது தொடர வேண்டும் என்றும் 27.8% ஆனோர் தற்போதைய மாகாண சபை முறைமை ஒழிக்கப்படல் வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

- சிங்கள சமூகம் இரு வேறு கருத்துக்களை கொண்டுள்ளது. சிங்கள சமூகத்தின் கணிசமானோர் (32.9%) தற்போதைய மாகாண சபை முறைமை ஒழிக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்துவதுடன், 30.3% ஆனோர் அது தொடர வேண்டும் என்றும் கூறுகின்றனர். முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட அரைவாசியினர் (45%) தற்போதைய மாகாண சபை முறையானது தொடர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும், குறிப்பிடத்தக்க சதவீதமான தமிழ் மக்களும் (46.8%) மலையக தமிழ் சமூகமும் (40.4%) மாகாண சபைகளுக்கு மேலதிகமான அதிகாரங்களுடன் தற்போதைய மாகாண சபை முறைமை தொடர வேண்டும் என தெரிவிக்கின்றனர்.

- இரு வயதுப் பிரிவுகளினதும் அபிப்பிராயமானது மாகாண சபை முறைமை தொடர்தல் அதனை ஒழித்தல் ஆகிய இரு கருத்துக்களுக்கு ஆதரவாக பகிரப்படுகின்றது. எவ்வாறாயினும், தற்போதைய மாகாண சபை முறையானது தொடர வேண்டும் என்பதற்கான ஆதரவு ஒப்பீட்டளவில் இளையோரை விட (18-29 வயது) பெரியோரிடையே (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) அதிகமாக உள்ளது. மேலும் குறிப்பிடத்தக்க சதவீதமான இளையோர் (21%) மாகாண சபைகளுக்கு மேலதிகமான அதிகாரங்களுடன் தற்போதைய மாகாண சபை முறைமை தொடர வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.

- இந்த வகையிலான கண்ணோட்டம் நகர்ப்புற கிராமப்புற பகுதிகளிலும் பிரதிபலிக்கிறது, கிராமப்புற மற்றும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த இரு மக்கள் பிரிவினரும் இரு வேறுபட்ட கருத்தை வெளிப்படுத்துகிறார்கள். இருப்பினும், கிராமப்புற மக்களில் குறிப்பிடத்தக்களவு சதவீதத்தினர் (32.6%) தற்போதைய மாகாண சபை முறையானது தொடர வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். மாறாக நகர்ப்புற மக்களில் எதிராக 21.2% இனரே இக் கருத்தை ஆதரிக்கின்றனர்.

- மாகாண சபைகளுக்கு ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா/ ஏற்றுக்கொள்ளவில்லையா என்று கேட்டபோது, கிட்டத்தட்ட அரைவாசி இலங்கையர்கள் (47.2%) இக் கூற்றை ஏற்றுக்கொள்கின்றனர்.

- சமூகத்தின் பெரும்பான்மையான சிங்களம் (45.1%), தமிழ் (64.9%) மற்றும் மலையக தமிழ் (57.9%) இக் கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். இருப்பினும், முஸ்லீம் சமூகத்தில் பெரும்பான்மையானோர் (48.4%) இக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

- கிட்டத்தட்ட அரைவாசி இலங்கையர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்வதாக தெரிவிப்பதுடன் இக்கருத்தை இரு வயதுப் பிரிவினரும் ஏற்றுக்கொள்வதை காணக்கூடியதாக உள்ளது.


## ஊழல் இடம் பெறுகின்ற அளவு தொடர்பான அபிப்பிராயம்

- பொருளாதார நெருக்கடிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும் போது, தற்போது நாட்டின் ஊழல் இடம் பெறுகின்ற அளவு அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என வினவியபோது, பெரும்பான்மையான இலங்கையர்கள் (87.2%) அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.
- இந்தக் கண்ணோட்டம் இரு வயதுப் பிரிவுகளிலும் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளிலும் காணப்படுகிறது.


# ஆய்வு முடிவுகள்

## கணக்கெடுப்பு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் சமூகத்தின் பல்வேறு பிரிவினரால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள் மீதான பொதுமக்களின் அபிப்பிராயம்

வரைபு 01: முக்கிய கோரிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம்





வரைபு 02: முக்கிய கோரிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - வயது




## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றிய அபிப்பிராயம்


வரைபு 03: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு





வரைபு 04: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு - வயது



வரைபு 05: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனுமதித்தல்





வரைபு 06: உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனுமதிக்காமைக்கான காரணம்




# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பான பொதுமக்களின் அபிப்பிராயம்


வரைபு 07: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு





வரைபு 08: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு - வயது



வரைபு 09: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை அனுமதித்தல்





வரைபு 10: நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை அனுமதிக்காமைக்கான காரணம்




## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம்


வரைபு 11: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம்





வரைபு 12: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - இனம்




வரைபு 13: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - மதம்





வரைபு 14: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான அபிப்பிராயம் - வயது




வரைபு 15: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகள் தொடர்பிலான அபிப்பிராயம்




வரைபு 16: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளில் சர்வதேச பங்களிப்பு மீதான அபிப்பிராயம் - இனம்




வரைபு 17: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளில் சர்வதேச பங்களிப்பு பற்றிய அபிப்பிராயம் - மதம்




## மலையகத் தமிழ்


வரைபு 18: மலையகத் தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகள் தொடர்பிலான விழிப்புணர்வு





வரைபு 19: மலையகத் தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகள் தொடர்பிலான விழிப்புணர்வு - இனம்




வரைபு 20: மலையகத் தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகள் தொடர்பிலான விழிப்புணர்வு - வயது




வரைபு 21: லயன்களில் வசிக்கும் மலையகத் தமிழ் சமூகத்திற்கு சட்ட உரிமையுள்ளள காணி வழங்கப்படுவதற்கான ஆதரவு




வரைபு 22: லயன்களில் வசிக்கும் மலையகத் தமிழ் சமூகத்திற்கு சட்ட உரிமையுள்ளள காணி வழங்கப்படுவதற்கான ஆதரவு - இனம்




# தேர்தல் பிரச்சார நிதிச் சட்டம்


வரைபு 23: தேர்தல் பிரச்சாரங்களுக்கு செலவிடுதல் பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம்





வரைபு 24: தேர்தல் பிரச்சாரங்களுக்கு செலவிடுதல் பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் - வயது




வரைபு 25: தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) குறித்த விழிப்புணர்வு




வரைபு 26: தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) குறித்த விழிப்புணர்வு - வயது





வரைபு 27: தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் (பிரச்சார நிதிச் சட்டம்) பற்றிய கருத்து




## உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகளின் செயற்படாநிலை


வரைபு 28: உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம்





வரைபு 29: உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் - பிரதேசம்



வரைபு 30: மாகாண சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம்





வரைபு 31: மாகாண சபைகளின் செயற்படாநிலையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் - பிரதேசம்




## சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம்


வரைபு 32: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய விழிப்புணர்வு





வரைபு 33: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய விழிப்புணர்வு - வயது மற்றும் பிரதேசம்



வரைபு 34: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம்





வரைபு 35: சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரை செய்த கொள்கை மாற்றங்கள்/ கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அபிப்பிராயம் - வயது மற்றும் பிரதேசம்




## மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம்


வரைபு 36: மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம்





வரைபு 37: மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் - இனம்




வரைபு 38: மாகாண சபை முறைமை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயம் - வயது மற்றும் பிரதேசம்





வரைபு 39: மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளல்



வரைபு 40: மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளல் - இனம்





வரைபு 41: மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளல் - வயது




## ஊழல் இடம் பெறுகின்ற அளவு பற்றிய கருத்து

வரைபு 42: ஊழல் இடம் பெறுகின்ற அளவு பற்றிய கருத்து




வரைபு 43: ஊழல் இடம் பெறுகின்ற அளவு பற்றிய கருத்து - வயது மற்றும் பிரதேசம்



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது ஒரு சுயாதீனமான, கட்சி சார்பற்ற அமைப்பாகும், இது முதன்மையாக ஆளுகை மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. பொதுக் கொள்கை விவாதத்தில் சிவில் சமூகத்தின் முக்கிய பங்களிப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 இல் உருவாக்கப்பட்டது, CPA பொதுக் கொள்கை விமர்சிக்கப்படும், மாற்று வழிகள் அடையாளம் காணப்பட்டு பரப்பப்படும் ஆராய்ச்சி மற்றும் வாதிடும் திட்டங்களுக்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112081384-6
இணையதளம்: http://www.cpalanka.org

சோஷல் இன்டிகேட்டர் என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) ஆய்வுப் பிரிவாகும். இது 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறுவப்பட்டது. இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளில் நிரந்தர, தொழில்முறை மற்றும் சுயாதீனமான வாக்களிப்பு வசதிக்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்புகிறது. கருத்துக்கணிப்பு ஆய்வு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையால் உந்தப்பட்டு, SI அதன் தொடக்கத்தில் இருந்தே பல சமூக- பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளில் கருத்துக் கணிப்புக்களை நடத்தி வருகிறது.

முகவரி: 6/1B, 1/1, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112584050
இணையதளம்: http://cpalanka.org/survey-research/